# தொழிலில் ரிஸ்க் எடுக்கும் துணிவு




கட்டுரையாளர்

**K. T. ராஜன்,**

சேர்மன் EPC, மதுரை


நம்மில் பொதுவாக ரிஸ்க் எடுக்கும் மனோபாவம் 100ல் 10 பேருக்கு மட்டுமே இருக்கிறது. எந்த சூழ்நிலையிலும், எல்லா செயல்களிலும் சில ரிஸ்க் இருக்கத்தான் செய்கிறது. விளையாடுவது, வாகனம் ஓட்டுவது, நீண்ட தூரம் பயணம் செய்வது கூட ரிஸ்க்காக தான் பார்க்கப்படுகிறது. அப்படி இருக்கும் பொழுது, ஒரு புதிய தொழில் தொடங்கும் போது அதை வெற்றிகரமாக கொண்டு செல்லும் போது ரிஸ்க் எடுக்கும் மனோபாவம் கண்டிப்பாக இருக்க வேண்டும். பொதுவாக நமக்கு ரிஸ்க் எடுக்கும் குணம் குறைவு என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகள் மற்றும் சார்ந்துள்ள நண்பர்களாக கூட இருக்கலாம்.

அதிக ரிஸ்க் அதிக வளர்ச்சி (High Risk High Return) தரும். குறைந்த ரிஸ்க் குறைவான வளர்ச்சி (Low Risk Low Return) தரும்.

மக்கள் தொகையில் அதிக அளவில் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் இருப்பது நம் நாட்டின் பெரிய பலம். இந்தியாவைத் தொழில் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மாற்றும்





திறமை இவர்களிடம் உள்ளது. ரிஸ்க்குகள் இருந்தாலும் இளைஞர்கள் துணிவுடன் தொழில் செய்ய முன் வரவேண்டும் (No pain no gain).

பொருளாதாரம் உயர வேண்டுமெனில், புதிய தொழில் தொடங்குபவர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் ரிஸ்க் எடுக்க தயங்குகிறார்கள். ஒரு அலுவலகத்தில் வேலை செய்து மாத சம்பளம் வாங்கினாலே போதும் என்கின்ற மனநிலை அவர்களிடம் இருக்கிறது. வேலை பார்ப்பது 'ரிஸ்க்' இல்லாதது என்று இவர்கள் கருதுகின்றனர். இதனால், ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு, பொருளாதார ரீதியாக, இவர்களால் பெரிய முன்னேற்றத்தைக் காண முடிவதில்லை.

பெரிய தொழிலதிபர்கள் கூட தங்களது வாரிசுகளை தனது தொழிலை தொடர அனுமதிப்பதில்லை. காரணம் தான் சேமித்த பணம் வீண் போய்விடுமே என்ற எண்ணம்தான். அதாவது ரிஸ்க் எடுக்க துணிவு இல்லாததுதான். இந்த மனோபாவம் கவலைப்பட வைக்கிறது.

நமது இளைஞர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்று உயர்ந்த பதவிகளில் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். இங்கேயே ஏராளமான வியாபார வாய்ப்புகள் இருக்கின்றன. தொழிலில் இருக்கும் ரிஸ்க் கண்டு பயப்படாமல், புதிய ஸ்டார்ட் அப் ஐடியாக்கள் மூலம் தொழிலை தொடங்கி, பலருக்கு வேலை கொடுக்கும் வாய்ப்புகளையும் உருவாக்கலாம்.

எதிர்பார்க்கும் ஆபத்துக்களும் அதற்கான பாதுகாப்பும் (Calculated Risks & Protection)

இரு சக்கர வாகனம் ஓட்டும் போது ஹெல்மட் அணிந்து கொள்வதும், நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது சீட் பெல்ட் அணிந்து கொள்வதும்

தொடங்குபவர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் ரிஸ்க் எடுக்க தயங்குகிறார்கள். ஒரு அலுவலகத்தில் வேலை செய்து மாத சம்பளம் வாங்கினாலே போதும் என்கின்ற மனநிலை அவர்களிடம் இருக்கிறது. வேலை பார்ப்பது 'ரிஸ்க்' இல்லாதது என்று இவர்கள் கருதுகின்றனர். இதனால், ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு, பொருளாதார ரீதியாக, இவர்களால் பெரிய முன்னேற்றத்தைக் காண முடிவதில்லை.

பெரிய தொழிலதிபர்கள் கூட தங்களது வாரிசுகளை தனது தொழிலை தொடர அனுமதிப்பதில்லை. காரணம் வெளிநாடுகளுக்கு சென்று உயர்ந்த பதவிகளில் வேலை செய்து கொண்டிருக்கின்றனர். இங்கேயே ஏராளமான வியாபார வாய்ப்புகள் இருக்கின்றன. தொழிலில் இருக்கும் ரிஸ்க் கண்டு பயப்படாமல், புதிய ஸ்டார்ட் அப் ஐடியாக்கள் மூலம் தொழிலை தொடங்கி, பலருக்கு வேலை கொடுக்கும் வாய்ப்புகளையும் உருவாக்கலாம்.

எதிர்பார்க்கும் ஆபத்துக்களும் அதற்கான பாதுகாப்பும் (Calculated Risks & Protection)

இரு சக்கர வாகனம் ஓட்டும் போது ஹெல்மட் அணிந்து கொள்வதும், நான்கு சக்கர வாகனம் ஓட்டும் போது சீட் பெல்ட் அணிந்து கொள்வதும்





எவ்வாறு ஒரு பாதுகாப்பை தருகின்றதோ, அதுபோல தொழிலிலும் பல இடர்பாடுகளை கடக்கும் போது Calculated Risk எடுக்கும் போது அந்த தொழில் பயணம் உடனடியாக நின்று விடாமல் இடர்பாடுகளை சந்தித்தாலும் தொடர்ந்து முன்னேறி செல்ல உதவுகின்றன.

சரியான வணிகத் திட்டம் (Proper Business Plan), திட்ட வணிக நம்பகத்தன்மை (Project Commercial Viability), எதிர்பாராத செலவுகள் (Provisions for Contingency) காப்பீட்டு பாதுகாப்பு (Insurance Protection), மூலதன மேலாண்மை (Working Capital Management) போன்றவற்றில் கவனம் செலுத்தி நிறுவனங்களை நடத்தும் போது சிறிய மற்றும் பெரிய ரிஸ்க்குகளில் இருந்து தொழிலை பாதுகாப்பாக கொண்டு செல்ல முடியும். நிறுவனத்தின் அடிப்படை வணிக கணக்குகளை எப்படி கையாள்வது என்பது பற்றி அடுத்த இதழில் பார்க்கலாம்.

தொடர்புக்கு : 98421 09054